www.Padasalai.Net www.CBSEtips.in

**11** **R**

Reg. No. [ ]

# அரையாண்டுத் தேர்வு - 2022

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

## தமிழ்

### பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 14 x 1 = 14

1. 'ஆறாம் திணை' எழுதியவர்..........
அ) சு. வில்வரத்தினம் ஆ) அ. முத்துலிங்கம் இ) இந்திரன் ஈ) ஜெயபாலன்
2. சுட்டெழுத்துகளைத் தேர்வு செய்க. அ) அ, ஆ ஆ) ய், வ் இ) அ, இ, உ ஈ) எ, யா
3. உலகச் சிட்டுக்குருவிகள் நாள் அ) மார்ச், 20 ஆ) ஏப்ரல், 20 இ) மே, 20 ஈ) செப்டம்பர், 20
4. 'காவடிச் சிந்தின் தந்தை' எனப் போற்றப்படுபவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) அருணகிரிநாதர் ஈ) அண்ணாமலையார்
5. 'ஒப்புரவு' என்பதன் பொருள்
அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்முடையது
6. தொல்காப்பியத்திலுள்ள இயல்களின் எண்ணிக்கை அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13
7. 'பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்' – இவ்வடியில் பொதிந்துள்ள பண்புத்தொகைச் சொற்கள்
அ) பிரசம், தீம்பால் ஆ) பிரசம், வெண்சுவை இ) வெண்சுவை, தீம்பால் ஈ) தீம்பால், கலந்த
8. 'தளிர் போலும் மேனி' என்பது
அ) வினை உவமை ஆ) பயன் உவமை இ) மெய் உவமை ஈ) உரு உவமை
9. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை
ஈ) மா முன் நேர்
10. சீறாப்புராணம் இயற்றியவர்
அ) உமறுப்புலவர் ஆ) பனு அகமது மரைக்காயர் இ) வள்ளல் சீதக்காதி ஈ) அபுல் காசியம் மரைக்காயர்
11. 'Smart phone' என்பதன் கலைச்சொல் அ) தொலைபேசி ஆ) திறன்பேசி இ) அலைபேசி ஈ) கைபேசி
12. பாரதிதாசனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்
அ) குடும்ப விளக்கு ஆ) புரட்சிக்கவி இ) பிசிராந்தையார் ஈ) சேர தாண்டவம்
13. கூவும் குயிலும் கரையும் காகமும் – தொடரில் இடம்பெற்ற மரபு
அ) பெயர்மரபு ஆ) வினை மரபு இ) ஒலிமரபு ஈ) இவை மூன்றும்
14. நர்த்தகி நடராஜ் எக்கலையில் வல்லவர்?
அ) ஓவியம் ஆ) இசை இ) நாடகம் ஈ) பரதம்

### பகுதி - II பிரிவு – 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையெழுதுக.** 3 x 2 = 6

15. பாயிரம் என்றால் என்ன?
16. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
17. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?
18. 'ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள' – இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையெழுதுக.** 2 x 2 = 4

19. மசானபுஃபுகோகா குறிப்பிடும் ஐந்து வேளாண்மை மந்திரங்கள் யாவை?
20. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கருத்து யாது?
21. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

### பிரிவு – 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையெழுதுக.** 7 x 2 = 14

22. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக. அ) அணிந்துரை ஆ) மாசற்றார்
23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. வலி, வளி, வழி
24. விகுதிகள் எவற்றை உணர்த்தும்?
25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. நஞ்சிருக்கும்.



Scanned with CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

26. பிறமொழிச் சொற்களை தமிழாக்கம் செய்க. அ) வாடகை ஆ) கோரிக்கை
27. செய்தித் தொடராக்குக. என்னே ! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக்கலை.
28. மரபுச் சொல்லைத் தொடரில் அமைத்து எழுதுக. கானல்நீர்
29. மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்குரிய பொருளை எழுதுக. அ) Dt ஆ) ^
30. தமிழாக்கம் தருக. அ) Knowledge rules the world. ஆ) Education is the most powerful weapon, which you can use to change the world.

பகுதி - III பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையெழுதுக.** 2 x 4 = 8

31. "சலச வாவியில் செங்கபல் பாயும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. விரும்பியதை அடைவது எப்படி? குறள் வழி விளக்குக.
33. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
34. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையெழுதுக.** 2 x 4 = 8

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
36. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' என்பதைச் சான்றுகளுடன் விவரிக்க.
37. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் – குறிப்பு வரைக.
38. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு வினாக்களுக்கு விடையெழுதுக.** 3 x 4 = 12

39. பொதுவியல் திணை (அல்லது) பாடாண் திணையை விளக்குக.
40. பிறிதுமொழிதல் அணி (அல்லது) உருவக அணியை விளக்குக.
41. 'ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன' ஏன்?
42. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
அ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.
ஆ) தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.
43. இலக்கிய நயம் பாராட்டுக.
"தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைக்கண் விழித்து நோக்க,
தெண்திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ" – கம்பர்

பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 3 x 6 = 18

44. அ) "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" – இக்கூற்றை முப்பால் வழி விளக்குக. **(அல்லது)**
ஆ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.
45. அ) தாம் வாழ்ந்த கால கட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக. **(அல்லது)**
ஆ) 'கல்லும் கதை சொல்லும்' என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.
46. அ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது? **(அல்லது)**
ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6

47. அ) 'உண்டால் அம்ம' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.
ஆ) 'நன்று' என முடியும் குறள்.



Scanned with CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com